2017 ஜூலை 11]

174—

வட்ட மருத்துவமனை

***3594—திரு. V.T. கலைச்செல்வன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, வேப்பூர் வட்டம், வேப்பூரிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் தொகுதி, வேப்பூரிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் கொள்கையின்படி 23–9–2016 அன்று தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.*

திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் தழைக்க, தமிழினம் செழிக்க, தன் ஆயுளையே அர்ப்பணித்து, அன்னைத் தமிழ் பூமி காத்த அற்புதத் தலைவி, கலையுலகில் அவதரித்து, (மேசையைத் தட்டும் ஒலி), கருணைத் தாயாக உருவெடுத்து, தமிழினத்தின் வரமாகி, விழி அசைவில் சாதனையை, விரல் அசைவில் சரித்திரத்தை அன்றாடம் படைத்திட்ட ஆற்றல்களின் அமுதசுரபி, மாண்புமிகு அம்மா அவர்களின் பொன்மலர் பாதங்களைப் போற்றி வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியை, மாட்சி குறையாமல் ஆட்சி நடத்தும் சேலத்தின் சிங்கம், தமிழகத்தின் தங்கம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை அன்போடு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

வினா தொடுத்து, அவையில் எடுப்பதற்கு முன்னரே, வேப்பூர் மக்களின் வாட்டம் போக்கிட, அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி, தகுதி மிகு கட்டடங்கள் எழ நிதியளித்து, வரமளித்த மாண்புமிகு அம்மா அவர்கள் துயில்கொள்ளும் திசையை நோக்கி, நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, பணிந்து வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருகி வரும் மக்கட்தொகை, நாள்தோறும் வரும் நோயாளிகளின் வருகை, சுற்றியுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட ஊராட்சியில் வாழ்கின்ற மக்கள் மற்றும் நகரப் பகுதியில் வசிக்கின்ற மக்களின் நலன் கருதி, விருத்தாசலம் அரசு மருத்துவமனையை, மாவட்ட மருத்துவமனைக்கு இணையாகத் தரம் உயர்த்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சட்டமன்றத் தொகுதி, வேப்பூர் ஆரம்ப சுகாதார நிலையம் தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டு, நான்கு கூடுதல் மருத்துவர்கள், 19 புதிய பணியிடங்கள் அதைத் தொடர்ந்து, ஒரு கோடியே 53 இலட்சம் ரூபாய் செலவில் கட்டடங்கள் கட்டப்பட்டு மிகச் சிறப்பாக வழங்கப்பட்டிருக்கின்றன. அதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றியைத் தெரிவித்திருக்கின்றார்.

விருத்தாசலம் அரசு மருத்துவமனைக்கு, எனது அறிவிப்பில்கூட அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அங்கு நோயாளிகள் அதிக எண்ணிக்கையில் வருவதாகச் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினர் கோரியிருக்கின்ற வசதிகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, படிப்படியாகச் செய்து கொடுக்கும் என்ற நல்ல தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 ஜூலை 11]

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.*

திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு என்னுடைய நன்றியினை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். விருத்தாசலம் அரசு மருத்துவமனையில்* C.T. Scan *வசதி செய்திடவும், மருத்துவர்களின் எண்ணிக்கையை உயர்த்தி வழங்கிடவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு, நன்றிகூறி, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினரே நன்றி சொல்லிவிட்டார், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.*

திரு. ஒய். பிரகாஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதியில் தளி, தேன்கனிக்கோட்டை, கெலமங்கலம், அஞ்செட்டி ஆகிய இடங்களில் 4 மருத்துவமனைகள் இருக்கின்றன. அந்த 4 மருத்துவமனைகளிலும் சரியான மருத்துவ வசதி இல்லாத காரணத்தினால், அனைத்து நோயாளிகளும் பக்கத்தில் இருக்கக்கூடிய கர்நாடக மாநிலத்திற்குச் செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்பாக நம்முடைய துறையின் செயலாளர் அவர்கள்கூட நேரடியாக வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். தேன்கனிக்கோட்டையில் 60 படுக்கைகள் வரை இருக்கக்கூடிய நிலையில், 191 பேரை* admission *போட்டு தரையில் படுக்க வைக்கக்கூடிய நிலைமை அங்கிருக்கிறது. அதையும் தாண்டி இன்றைக்கு ஒரு புதிய செய்தி வந்திருக்கிறது. என்னுடைய தொகுதி நாட்ராம்பாளையத்தில் புதிதாக ஒரு காய்ச்சல் தாக்கியிருப்பதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. ஆகவே, என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய 4 மருத்துவமனைகளையும் தரமுயர்த்தித் தர இந்த அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கடந்த 5 ஆண்டுக் கால ஆட்சியிலே ஒரு சட்டமன்றத் தொகுதியிலே மிக அதிகமான ஆரம்ப சுகாதார நிலையங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், அது தங்கள் தொகுதியிலேதான். தாங்கள் சார்ந்திருக்கக்கூடிய தளி தொகுதியிலேதான் மிக அதிகமாக என் நினைவுப்படி—7 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே வழங்கப்பட்டிருக்கின்றன. தளி தொகுதி என்பது மலைவாழ் மக்கள் இருக்கக்கூடிய பகுதி. நம்முடைய மாநிலத்தினுடைய கடைக்கோடி எல்லையோரப் பகுதி என்பதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டுதான் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மிக அதிகமான ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தளி தொகுதிக்கு வழங்கியிருக்கின்றது. எனவே, தளி தொகுதியிலே மருத்துவச் சேவை மிகச் சிறப்பாக இருக்கிறது. தாங்கள் குறிப்பிட்டதுபோல, remote பகுதியான அஞ்செட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசுச் செயலாளர்கூட வந்து ஆய்வு செய்தார்கள். நீங்கள் பெருமைப்படக்கூடிய விஷயம் என்று சொன்னால், தாங்கள் சார்ந்திருக்கக்கூடிய இவ்வளவு remote பகுதியாக இருக்கக்கூடிய உள்காட்டுப் பகுதியாக இருக்கக்கூடிய அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில்கூட வரக்கூடிய நோயாளிக்கு அது என்ன வகையான காய்ச்சல் என்பதை ஆய்வு செய்யக்கூடிய அளவிற்கு இன்றைக்கு மக்கள் நல்வாழ்வுத் துறை, நம்முடைய சுகாதாரத் துறை மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது என்பதை நீங்கள் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். இது அம்மா அவர்களின் அரசினுடைய பெருமை என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன. எந்தப் பதட்டமும், பீதியும் தேவையில்லை. தாங்கள் சொல்லக்கூடிய அந்தக் கூடுதல் வசதிகளும் வருங்காலத்திலே ஆய்வு செய்யப்பட்டு, செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

2017 ஜூலை 11]

திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகின்றேன். மயிலாடுதுறை அரசு பெரியார் மருத்துவமனைக்கு தாய்–சேய் நலனைப் பாதுகாக்க மேன்மைமிகு மையம்* Centre of Excellence *அமைக்க ரூ.20 கோடி தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களுக்கும், மக்கள் நல்வாழ்வுத் துறைக்கும் எனது சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த பெரியார் மருத்துவமனைக்கு* MRI Scan *அல்லது* CT Scan *வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அறிவித்த 108 அறிவிப்பிலே தங்களுக்கும் சிறப்பான அறிவிப்புகள் வழங்கப்பட்டன. மேலும், கூடுதல் வசதிகளும் படிப்படியாகச் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 175, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

175—

உலர்களம்

***4250—திருமதி மு. சந்திரபிரபா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம், அச்சங்குளம் கிராமத்தில் உலர்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?